# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 04 வியாழக்கிழமை 19.12.2024 கதிர் 85







# எலிக்காய்ச்சல் விலங்குகளிலும் வேகமாகப் பரவும் அபாயம்!

## – கால்நடை சுகாதார, உற்பத்தித் திணைக்களப் பணிப்பாளர் எச்சரிக்கை –



(யாழ்ப்பாணம், டிச. 19)

**வடக்கு மாகாணத்தில் தற்போது பரவியுள்ள எலிக்காய்ச்சல் நோயானது மனிதர்கள் உட்பட பல்வேறு விலங்குகளிலும் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக வடக்கு மாகாண கால்நடை சுகாதார, உற்பத்தித் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் மருத்துவர் எஸ். வசீகரன் தெரிவித்துள்ளார்.**

எலிக்காய்ச்சல் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு ஒன்று, இன்று காலை திருநெல்வேலியில் அமைந்துள்ள கால்நடை சுகாதார உற்பத்தி திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதன் போது கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,"இந்த நோயானது லெப்றரோஸ்பைரா எனப்படும் ஒரு வகை பக்டீரியாவினால் ஏற்படுத்தப்படுகின்ற தொற்று நோயாகும். இந்நோயினால் பாதிக்கப்பட்ட எலிகளின் சிறுநீரில் இப்பக்டீரியாக்கள் வாழும். எலியின் சிறுநீர் மற்றும் மலம் மூலம் வெளியேறும் இப் பக்ரீரியாவானது மழை காலங்களில் மழைநீர் மற்றும் வெள்ளத்தில் கலந்து அயற்புறங்களுக்கும் பரவும். மழை காலங்களில் குடிநீர்க் கிணறுகளில் கூட தொற்றுக் கிருமிகள் கலக்கக்கூடும்.தொற்றடைந்த நீரை பருகுவதாலோ அன்றி காயமுற்ற தோல், கண், வாய் போன்ற பகுதிகளில் தொடுகை உறும் வேளைகளில் இப் பக்றீரியா உடலினுள் ஊடுருவிச் செல்லும் வாய்ப்புள்ளது.

7

## கல்வி உபகரணக் கொடுப்பனவு பெறும் மாணவர் தெரிவில் மட்டுபடுத்தல் இல்லை!

(கொழும்பு, டிச. 19)

பாடசாலை அப்பியாசக் கொப்பிகள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான மானியத் திட்டம், அஸ்வெசும கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும் குடும்பங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அஸ்வெசும கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளாத, எனினும் பொருளாதார ரீதியாக மிகவும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ள சிறுவர்களுக்காகவும் குறித்த கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் நாட்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களைத்தெரிவு செய்யும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படும் என செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக 55 வீதமான பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தை மேற்கோள் காட்டி அண்மையில் பிரதமர் ஹரினி அமரசூரிய கருத்து தெரிவித்திருந்தார். (ஐ-05)

## 103 மியன்மார் அகதிகளுடன் வந்த படகு முல்லைத்தீவில் கடற்படையினரால் மீட்பு!

(முல்லைத்தீவு, டிச. 19)

இலங்கைக் கடல் எல்லையினுள் - முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் மேற்குக் கடற்பரப்பில் கரை ஒதுங்கிய நாட்டுப் படகு ஒன்றில் இருந்து 103 வியற்நாம் அகதிகள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு , முள்ளிவாய்க்கால் கடற பரப்பில் பெருமளவு ஆட்களுடன் படகொன்று கரை ஒதுங்குவதை அவதானித்த கடற்படையினர், அதனைப் பரிசோதனை செய்யும் நோக்குடன் மேலதிக படையைச் சம்பவ இடத்துக்கு அனுப்பி சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது, படகில் வந்தவர்கள் பற்றிய முழு விவரங்களையும் அறிய முடியாத நிலை இருந்ததாகவும், மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்

7

## மின்சார சபை – ஆசிய அபிவிருத்தி வங்கி புதிய கடன் ஒப்பந்தந்தில் கைச்சாத்திட்டன!



கொழும்பு, டிச. 19

இலங்கை மின்சார சபையின் திட்டங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கியின் 150 மில்லியன் டொலர் கடனுதவிக்கான ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்பட்டது.

இந்தக் கடன் தொகையை இலங்கை அரசாங்கத்தின்ஊடாக இலங்கை மின்சார சபைக்கு பெற்றுக்கொள்வதற்கான ஆரம்பகட்ட பேச்சுவார்த்தை கடந்த ஒக்டோபர் மாதம் நடத்தப்பட்டது.

அதன்படி கடந்த நவம்பர் மாதம் அதற்கான கடனுதவிக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இந்தக் கடன் தொகையைப் பயன்படுத்தி நாட்டின் மின்சார அமைப்பின் ஸ்திரத்தன்மையை மேம்படுத்த பல

7

### கடற்றொழிலாளர் விடயத்தில்

## மனிதாபிமான அனுகுமுறை என்றால் என்ன? முன்னாள் கடற்றொழில் அமைச்சர் கேள்வி!




(யாழ்ப்பாணம், டிச. 19)

கடற்றொழிலாளர் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறை என்றால் என்ன என்று ஜனாதிபதியிடம் வினவவுள்ளேன் என முன்னாள் கடற்றொழில், நீரியல்வள அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர்நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இலங்கையின் ஜனாதிபதி அனுரவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது கடற்றொழிலாளர்கள் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என கூறப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் குறித்த மனிதாபிமான அணுகுமுறை என்றால் என்ன என்பது தொடர்பில் ஜனாதிபதியிடம் வினவவுள்ளேன் என முன்னாள் கடற்றொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று

7

## உப்பு இறக்குமதிக்கு அனுமதி!



(கொழும்பு, டிச. 19)

உப்பு இறக்கு மதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த

# சம்மாந்துறையில் ஊடகவியலாளர்களுக்கான போதைப்பொருள் விழிப்புணர்வுச் செயலமர்வு







(சம்மாந்துறை, டிச. 19)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஏற்பாட்டில் "ஊடக அடிப்படையிலான போதைப்பொருள் தடுப்பு செயலமர்வு" இன்று வியாழக்கிழமை சம்மாந்துறை பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த செயலமர்வில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி.எம். ரஷாத் மற்றும் போதைப்பொருள் தடுப்பு, ஊடகத்துறை சார்ந்த நிபுணர்களின் நுண்ணறிவு விளக்கங்கள் இடம்பெற்றதுடன் விவாதங்கள் மற்றும் கேள்வி பதில் அமர்வுகளும் நடைபெற்றன.

போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் அதன் அழிவுகரமான விளைவுகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்த செயலமர்வில் ஊடகவிய லாளர்களின் பங்கேற்பானது போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்குவதற்கான எங்களின் கூட்டு முயற்சிகளுக்கு கணிசமான பங்களிப்பை வழங்கும் என இங்கு கருத்து தெரிவித்த தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி.எம். ரஷாத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வை சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி நௌபர் ஆரம்பித்து வைத்தார். மேலும் இந் நிகழ்வில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ராசிக் நபாயிஸ், ஏ.ஜெ.எம். இக்ராம் உட்பட ஊடகவியலாளர்கள், சமூக வலைத்தள செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ-09)

# குண்டுத் தாக்குதலின் நினைவாகப் புற்றுநோய் வைத்தியசாலைக்கு உதவி!

(கொழும்பு, டிச. 19)

தன் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதன் 25 ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூர்ந்து, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க மகரகமவில் உள்ள அபேக்ஷா புற்றுநோய் மருத்துவமனைக்கு ஒரு தொகுதி மருந்துகளை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

1999 ஆண்டு இடம்பெற்ற குண்டு வெடிப்பின் போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க படுகாயமடைந்தோடு, அவரது பாதுகாவலர்கள் பலர் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்திருந்தனர். உயிரிழந்த பாதுகாவலர்களின் குடும்பத்தினருன் சென்று இந்த நன்கொடைகளை வழங்கியதாக சந்திரிக்கா குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் மருத்தவர் லங்கா ஜயசூரிய ஆகியோரால் நடத்தப்படும் 'இந்திரா புற்றுநோய் அறக்கட்டளைக்கு' இந்த மருந்து நன்கொடை வழங்கப்பட்டதாக சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மேலும் தெரிவித்தார்.

"ஆறு மாடி வளாகம், நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு மதிப்புமிக்க சேவைகளை வழங்குகிறது. இங்கு சுவையான உணவு மற்றும் பானங்கள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் போன்ற அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளதுடன், போக்குவரத்துக் கட்டணத்தைச் செலவிட முடியாத மக்களுக்குக் கூட இங்கு உதவிகள் கிடைக்கின்றன" என்றும், "நன்கொடைகள் மூலம் மற்றவர்களுக்கு உதவ விரும்பும் எவருக்கும் இந்த மருத்துவமனை மிகவும் பெறுமதிமிக்க பொருத்தமான ஒரு இடமாகும் என்று முன்னாள் ஜனாதிபதி மேலும் கூறினார். (ஐ-12)

# மருத்துவர்களுக்கு இனி 63 இல் ஓய்வு!

(கொழும்பு, டிச.19)


அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகளின் ஓய்வு வயதை 60 இலிருந்து 63 ஆக நீடிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சுகாதார, ஊடகத்துறை அமைச்சர் மற்றும் பொதுநிர்வாக, மாகாண மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றும் சிறப்பு மருத்துவ நிபுணர்கள், அனைத்து தர மருத்துவ அதிகாரிகள், விசேட பல் சத்திர சிகிச்சை நிபுணர்கள், அனைத்து பல் சத்திர சிகிச்சை நிபுணர்கள், அனைத்து நிர்வாக தர மருத்துவ அதிகாரிகள் மற்றும் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து மருத்துவர்களின் ஓய்வு வயது 63ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வருடம் டிசெம்பர் மாதத்தில் ஓய்வு பெறவுள்ள மருத்துவ அதிகாரிகளுக்கும் இது பொருந்துமென அமைச்சரவை பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ஐ-05)

# பசறை – பதுளை வீதியில் ஆண் ஒருவரின் சடலம் !



பதுளை, டிச. 19

பசறை - பதுளை வீதியில் கோயில் கடைக்கு அருகாமையில் 45 முதல் 50 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பசறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பசறை - பதுளை வீதியில் கோயில் கடைக்கும், பசறை பால்சபைக்கும் இடையே வீதி ஓரமாக இந்தச் சடலம் காணப்படுவதுடன் அவ்விடத்தில் பாதணிகளும், பை ஒன்றும் அதற்கு அருகாமையில் பை ஒன்றில் 4 யோகட் கோப்பைகளும் காணப்படுகின்றன.

இறந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ள பசறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-05)

# வாகன இறக்குமதியில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிப்பு



(கொழும்பு, டிச 19)

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை 90 நாட்களுக்குள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்வது கட்டாய மாக்கப்பட்டுள்ளது.

வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட காலத்திற்குள் சம்பந்தப்பட்ட வாகனத்தை பதிவு செய்ய முடியாவிட்டால், சம்பந்தப்பட்ட இறக்குமதியாளர் மோட்டார் வாகனச் செலவு, காப்பீடு மற்றும் இறக்குமதி கட்டணங்கள் மற்றும் தாமதக் கட்டணங்களில் 45 சதவீதத்தை பதிவு செய்யும் போது செலுத்த வேண்டும்.

விற்பனை நோக்கத்திற்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை இறக்குமதியாளரின் பெயரிலோ, வியாபாரத்தின் பெயரிலோ அல்லது பணிப்பாளர்களின் பெயரிலோ பதிவு செய்வதையும் தடை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒரு இறக்குமதியாளர் 90 நாட்களுக்குள் அவர் இறக்குமதி செய்த மொத்த கார்களில் 25 சதவீதத்தை பதிவு செய்யாவிட்டால், 36 மாதங்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்ய தடை விதிக்கப்படும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது. அதிக அளவில் வாகனங்களை இறக்குமதி செய்வதையும், வாகனங்களை பதுக்கி வைப்பதையும் தடுப்பதே இதன் நோக்கமாகும்.

நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பை பாதுகாக்கும் நோக்கில் இந்த நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# ஞானசார தேரரை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு, டிச 19)

பொதுபல சேனா அமைப்பின் பொதுசெயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை கைது செய்ய கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இஸ்லாமிய மதத்தை அவமதித்ததாக குற்றம் சுமத்தப்பட்ட வழக்கில் பிரதிவாதியாக குறிப் பிடப்பட்டிருந்தும் நீதிமன்றத்தில் முன்னிலையாக தவறியதன் காரணமாக இந்த உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் தீர்ப்பு இன்று அறி விக்கப்படவிருந்த நிலையில், வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஞானசார தேரர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை எனவும், அதன்படி ஞானசார தேரரை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், ஞானசார தேரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றில் சமர்ப்பித்த சமர்ப்பணத்தில் தமது கட்சிக்காரருக்கு சுகவீனம் காரணமாக நீதிமன்றில் முன்னிலையாக முடியாதுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எனினும், சமர்ப்பணங்களை பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான், பிடியாணை பிறப்பித்துள்ளதோடு தீர்ப்பு அறிவிப்பை ஜனவரி 9ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். (ஐ)

# பெண்களை இலக்கு வைத்து வீடுகளுக்குள் நுழையும் மர்ம நபர்கள்

(கொழும்பு, டிச 19)

களுத்துறை, புலத்சிங்கள பிரதேசத்தில் பெண்கள் மட்டும் வாழும் வீடுகளை குறி வைத்து கொள்ளையடிக்கும் சம்பவங்கள் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

இரவு நேரங்களில் வீடுகளுக்குள் புகுந்து கொள்ளையடிப்பவர்கள் அப்பகுதியில் சுற்றித்திரிவதால், கிராம மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

பெண்கள் மட்டுமே இருக்கும் வீடுகளுக்கே கொள்ளையர்கள் பெரும்பாலும் செல்வதாக குறிப்பிடப்படுகின்றது.

இரவில் உள்ளே நுழைந்து வீடுகளில் எஞ்சியிருக்கும் உணவை உண்பது, குளிர்சாதனப் பெட்டியில் உள்ள இறைச்சி, மீன், முட்டை போன்றவற்றை எடுத்து செல்வது போன்ற வினோதமான வேலைகளை அவர்கள் செய்வதாகவும் தெரியவந்துள்ளது. பெண்களை அச்சுறுத்தும் வகையில் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (ஐ)

# பாரிய மருத்துவ மோசடி அம்பலப்படுத்தும் அநுர அரசு

*(கொழும்பு, டிச 19)*

*முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற பாரிய மோசடி குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சம கால அரசாங்கத்தின் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.*

*கொவிட் காலத்தில் ரெபிட் என்டிஜென் சோதனை கருவிகளை கொள்வனவு செய்ததில் இடம்பெற்ற மோசடி குறித்து சுகாதார அமைச்சு விசாரணை நடத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த மோசடி குறித்த விவரங்கள் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்திற்கு அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.*

*தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தில் (ஆேசுயு) பதிவு செய்யப் படாத ஒரு நிறுவனம் ரெபிட் என்டிஜென் சோதனை கருவிகளை வாங்குவதற்கு மிகப்பெரிய தொகையை செலவிட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.*

*கூடுதலாக, இந்த நிறுவனத்திடமிருந்து இரண்டு மில்லியன் ரெபிட் என்டிஜென் சோதனை கருவிகளை வாங்குவதற்கு 2.2 பில்லியன் ஷரூபா மக்கள் பணம் செலவிடப்பட்டுள்ளது.*

*நாடாளுமன்றத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் எழுப்பிய வாய்மொழி கேள்விக்கு பதிலளிக்கும்போது அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.*

*கொவிட் தொற்றுநோய் காலத்தில் தடுப்பூசிகள் மற்றும் விரைவான என்டிஜென் சோதனை கருவிகளை கொள்வனவுக்காக 3.2 பில்லியன் ஷரூபா செல விடப்பட்டுள்ளது. இதில், 2.2 பில்லியன் ரூபா, தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தில் பதிவு செய்யப்படாத நிறு வனத்திற்கு செலவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)*

# போர்க்குற்றவாளி டெர்மினேட்டர் இலங்கைக்குள் ஊடுருவல்



(கொழும்பு, டிச 19)

பாலஸ்தீன பிரஜையை கொலை செய்து, அவரது உடலை தவறான செய்கைக்கு உட்படுத்தியதாக தெரிவித்து குற்றம் சாட்டப்பட்டுள்ள இஸ்ரேலிய சிப்பாய் இலங்கைக்குள் நுழைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கெல் பெரன்புக் என அழைக்கப்படும் குறித்த நபர் இலங்கைக்கு வந்து கொழும்பில் தங்கியிருப்பதாக பெல்ஜியத்தை சேர்ந்த அரச சார்பற்ற அமைப்பு ஒன்று குற்றஞ்சாட்டியுள்ளது.

டெர்மினேட்டர் எனப்படும் பெரன்புக்கை கைது செய்யுமாறு இலங்கை அதிகாரிகளிடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளதாகவும், அதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துடன் ஒத்துழைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளதாக **“The Hind Rajab Foundation”** எனும் அரச சார்பற்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முறையான முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவரைக் கைது செய்ய சர்வதேச சிவப்பு அறிவிப்பை வெளியிடுமாறு சர்வதேச பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக **The Hind Rajab Foundation** தனது உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் சமூக ஊடகங்களில் பரவி வரும் வீடியோ பெரன்புக் எப்படி ஒரு கொடூரமான நபர், அவர் பாலஸ்தீனிய பிரஜையை கொன்று அதைப் பற்றி சிரித்து தற்பெருமை காட்டுவதாகவும் அமைப்பு குறிப்பிடடுள்ளது.

உயிரிழந்தவரின் கண்ணியத்தை புறக்கணித்து சர்வதேச மனிதாபிமான சட்டத்தை பெரன்புக் மீறியதாகக் கூறும் **The Hind Rajab Foundation**, இலங்கையில் பெரன்புக் இருப்பது அவருக்கு பொறுப்புக் கூற வேண்டிய முக்கியமான வாய்ப்பை வழங்குகிறது என்றும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பில் நீதியை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அதிகாரிகள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சர்வதேச பொலிசார் விரைந்து செயற்பட வேண்டுமெனவும், இவ்வாறான அட்டூழியங்களுக்கு தண்டனை வழங்கப்படாமல் இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ஹிந்த் ரஜப் அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

**The Hind Rajab Foundation** வெளிப்படுத்திய இந்த உண்மை தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க விடம் வினவிய போது, வெளிவிவகார அமைச்சிலிருந்து எவ்வித அறிவிப்பும் வரவில்லை என தெரிவித்துள்ளார்.

வேறொரு நாட்டில் சட்டவிரோத செயலில் ஈடுபட்ட ஒருவர் எமது நாட்டிற்குள் பிரவேசித்திருந்தால் அவரை கைது செய்ய வெளிவிவகார அமைச்சு ஊடக பொலிஸாருக்கு அறிவித்தல் கிடைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# பாஜக எம்.பி.க்களுக்கு காயம் ராகுல் காந்தி மீது வழக்கு பதிவு

கடந்த 17 ஆம் திகதி பாராளுமன்ற கூட்டத்தொடரின்போது மாநிலங்களவையில் பேசிய அமித்ஷா, 'அம்பேத்கர்.. அம்பேத்கர்.. அம்பேத்கர்' என முழக்கமிடுவது இப்போது பேஷன் ஆகிவிட்டது. இதற்கு பதிலாக கடவுளின் பெயரை இவ்வளவு முறை உச்சரித்திருந்தால், சொர்க்கத்திலாவது அவர்களுக்கு இடம் கிடைத்திருக்கும் என்று பேசினார்.

இந்த கருத்துக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து பாராளுமன்றத்திற்கு வெளியே அம்பேத்கர் புகைப்படங்களை ஏந்தி வண்ணம் அமித்ஷாவுக்கு எதிராக போராட்டம் நடத்தி வந்தனர்.

இதனையடுத்து அம்பேத்கரை அவமதித்த அமித்ஷா மன்னிப்பு கேட்க வேண்டும் என்று பாராளுமன்ற இரு அவைகளிலும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஜெய் பீம் என்று தொடர்ந்து கோஷங்களை எழுப்பினர். இதனால் அவை நடவடிக்கைகள் நேற்று முழுவதும் முடங்கின.

இதனைத்தொடர்ந்து பாஜக தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அமித் ஷா , பா.ஜ.க. ஒருபோதும் அம்பேத்கரை அவமதிக்காது. மூ அம்பேத்கரின் கொள்கைகளை பா.ஜ.க. பின்பற்றி வருகிறது. நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் கருத்துக்களை திரித்து கூறிய விதம் மிகவும் கண்டிக்கத்தக்கது. யுஐ மூலம் எனது பேச்சை காங்கிரஸ் திரித்து வெளியிட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

இந்நிலையில், அமைச்சர் பதவியில் இருந்து அமித் ஷா விலக வேண்டும் என்று வலியுறுத்தி



பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனிடையே அம்பேத்கரை காங்கிரஸ் கட்சி அவமதித்ததாக பாஜக எம்.பி.க்கள் பாராளுமன்றத்தில் போராட்டம் நடத்தினர்.

இதனையடுத்து பாராளுமன்ற வளாகத்தில் பாஜக எம்.பி.க்களுக்கும் எதிர்கட்சியினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இதில் பாஜக எம்.பி. பிரதாப் சந்திர சாரங்கி பலத்த காயமடைந்ததோடு பாஜக எம்.பி முகேஷ் ராஜ்புத்துக்கு காயம் ஏற்பட்டது. இதனையடுத்து இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இது தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசிய பாஜக எம்.பி. பிரதாப் சந்திர சாரங்கி, "நான் படிக்கட்டுக்கு அருகில் நின்று கொண்டிருந்த போது, ராகுல் காந்தி என் பக்கத்தில் வந்து ஒரு எம்.பியை என்மீது தள்ளிவிட்டார். அதனால் தான் நான் கீழே விழுந்து என் மண்டை உடைந்தது" என்று தெரிவித்தார்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் இதுகுறித்து விளக்கம் அளித்த ராகுல் காந்தி, "நடந்த சம்பவம் ஒருவேளை உங்களது கேமராவில் பதிவாகி இருக்கலாம். நான் பாராளுமன்றத்திற்குள் நுழைய முயன்றபோது பாஜக எம்.பி.க்கள் என்னை தள்ளி விட்டு மிரட்டல் விடுத்தனர். அப்போது மல்லிகார்ஜுன கார்கே அவர்களை எதிர்த்துத் தள்ளும்போது இந்த சம்பவம் நடந்திருக்கலாம்.

ஆனால் இந்த சலசலப்பை கண்டு நாங்கள் அஞ்சுவதில்லை. ஆனால் இது தான் பாராளுமன்ற நுழைவாயில் உள்ளே செல்ல எங்களுக்கு உரிமை உள்ளது. பாஜக எம்பிக்கள் எங்களை உள்ளே செல்ல விடாமல் தடுக்க முயன்றனர். அரசியலமைப்புச் சட்டத்தைத் தாக்கி அம்பேத்கரை அவர்கள் அவமதிக்கிறார்கள் என்பதே முக்கிய பிரச்சினை" என்று தெரிவித்தார்.

இதனிடையே காங்கிரஸ் எம்.பிக்களை பாராளுமன்றத்திற்குள் நுழைய விடாமல் பாஜக எம்.பிக்கள் தடுக்கும் வீடியோவை காங்கிரஸ் கட்சி பகிர்ந்துள்ள நிலையில் பாஜக எம்.பிக்களை தாக்கியதாக ராகுல் காந்தி மீது பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இது தொடர்பாக பேசிய மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி, "ராகுல் காந்தி கூறுவது அனைத்தும் பொய். எங்கள் எம்.பி.க்கள் அவர் வரும் போது வழிவிட்டனர். ஆனால் ராகுல் காந்தி எங்களை தள்ளிவிட்டார். அதனால் எங்களது எம்.பி.க்கள் பிரதாப் சந்திர சாரங்கி மற்றும் முகேஷ் ராஜ்புத் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது" என்று தெரிவித்தார். குறித்த சம்பவத்திற்காக ராகுல் காந்தி நாட்டு மக்களிடமும் காயம்பட்ட எம்.பி.க்களிடமும் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜ/ தெரிவித்தார்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. சார்பில் 23-ந் திகதி கிறிஸ்துமஸ் பெருவிழா!




தி.மு.க. சிறுபான்மை நல உரிமைப் பிரிவு சார்பில் கிறிஸ்துமஸ் பெருவிழா வருகிற 23-ந் திகதி மாலை 4 மணியளவில் பெரம்பூர் டான் போஸ்கோ பள்ளி வளாகத்தில் (பிருந்தா திரையரங்கம் அருகில்) தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது.

தி.மு.க. சிறுபான்மை நல உரிமைப் பிரிவுச் செயலாளர் டாக்டர் சுபேர்கான் வரவேற்புரையுடன் குறித்த விழா தொடங்குகின்றது . இவ்விழாவில் தமிழ்நாடு சிறுபான்மை ஆணையத் தலைவர் ஜோ.அருண், ஏ.கிறிஸ்டியன் சாம்ராஜ், (தமிழ் சுவி சேஷ லுத்தரன் திருச்சபை) டாக்டர் கதிரொலிமாணிக் கம் (இ.சி.ஐ. சென்னை பேராயர், இந்திய சுவிசேஷ திருச்சபை) நீதிபதி அக்பர் அலி, (முன்னாள் சென்னை ஐகோர்ட்டு நிதிபதி) பங்கு தந்தை சு.சுவர்ணராஜ் (தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்) த.இனிகோ இருதயராஜ் எம்.எஸ்., (தலைவர், கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கம்) பேரருள்பணி எச்.சர்மா நித்தியானந்தம் பொறுப்பு பேராயர் சி.எஸ்.ஐ. சென்னை பேராயம்).

கயிலைப்புனிதர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் (தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை உயர் நிலைக்குழு உறுப்பினர்), அருட்தந்தை மரிய ஆரோக்கியம் கனகா (ம) தாளாளர், பெரம்பூர் டான் போஸ்கோ பள்ளி)

பிரவின்குமார் டாடியா (உறுப்பினர், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்) ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத் தலைவர் அமைச்சர் பி.கே.சேகர் பாபு நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவு பெறுகின்றது .

குறித்த நிகழ்வினை கவிஞர் ஜோ.அருள் பிரகாஷ் தொகுத்து வழங்குகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## எச்டிஎஃப்சி வங்கியில் நுழைந்து ஊழியரின் காதை வெட்டிய நபர்!

சென்னை தி.நகர் பர்கிட் சாலையில் உள்ள எச்.டி.எஃப்.சி வங்கியில் நுழைந்த நபர் அங்கு ஊழியராக பணியாற்றி வந்த தினேஷ் என்பவரை அரிவாளால் வெட்டிய சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.


இன்று காலை அடையாளம் தெரியாத நபர் ஒருவர் வாடிக்கையாளர் போல் வங்கிக்குள் நுழைந்து, வெகுநேரமாக ஆள்நடமாட்டத்தை அறிந்து பின்னர் தினேஷ் என்ற வங்கி ஊழியரின் காதை வெட்டி உள்ளார். இதனால் படுகாயமடைந்த தினேஷை அங்கிருந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

மேலும் காதை வெட்டிய நபரை அங்கிருந்த




ஊழியர்கள் பிடித்து பொலிஸில் ஒப்படைத்ததையடுத்து குறித்த சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார் அங்கு பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி காட்சிகளை கொண்டு விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் 25ம் திகதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு!



நேற்று, தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, இன்று தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவுகிறது. இது, அடுத்த 12 மணி நேரத்தில், வடமேற்கு திசையில் வடதமிழக - தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகளை நோக்கி நகர்ந்து, அதற்கடுத்த 24 மணி நேரத்தில், வடக்கு திசையில், ஆந்திர கடலோரப்பகுதிகளை ஒட்டி நகரக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று வடகடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

நாளை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

21-ந் திகதி முதல் 25-ந் திகதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஒருசில பகுதிகளில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 27-28 செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 23 செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஒருசில பகுதிகளில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 27-28 செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 23 செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இன்று தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். நாளை வடதமிழக கடலோரப்பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# உலகை அச்சுறுத்தும் சுற்றுச்சூழல் மாசு!





நாம் வாழும் பூமி, அழகிய இயற்கை வளங்கள் நிறைந்த ஓர் அற்புதமான கிரகம். ஆனால், மனிதனின் அபரிமிதமான தேவைகள் மற்றும் தொழில்மயமாதல் காரணமாக, இன்று நாம் சூழல் மாசுபாட்டின் பிடியில் சிக்கிக் கொண்டுள்ளோம். காற்று, நீர், மண் என அனைத்து இயற்கை வளங்களும் மாசுபட்டு வருகின்றன. இந்த மாசுபாடு உயிரினங்களின் வாழ்வாதாரத்தைப் பாதித்து, பூமியின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

காற்று, நீர் மற்றும் மண் ஆகிய வளங்களும், அங்கு வாழும் உயிரினங்களும் பாதிப்புக்குள்ளாகி, அதனால் சூழல் சமநிலை சீரற்றுப் போகிறது..சூழலுக்கும் அங்கே வாழுகின்ற உயிரினங்களுக்கும் கேடு விளைவிக்கக்கூடிய பொருட்களினதும், பிறவற்றினதும் சேர்க்கையினால் அல்லது வெளியேற்றத்தினால் சூழல் சமநிலை பாதிக்கப்படுகிறது..

இதனால் தாவரங்களும், விலங்குகளும் பல்வேறு வகையான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றன . தற்பொழுது உலகை அச்சுறுத்தும் பத்து அச்சுறுத்தல்களில் சூழல் மாசடைதலும் ஒன்று என ஐக்கிய சபை அறிவித்துள்ளது.

பல்வேறு வகையான வேதியியற் பொருட்களும், தூசியும் வளிமண்டலத்துக்கு வெளியேற்றப்படுவதன் மூலம் வளி மாசடைகின்றது. தற்காலப் போக்குவரத்து ஊர்திகளாலும், தொழிற்சாலைகளால் வெளிவிடப்படும் கழிவுகளும் வளி மாசடைதலுக்கு மிக முக்கிய காரணங்களாகும்.

மேலும் தொழிற்சாலைகள், விவசாய நிலங்கள், விவசாயப் பண்ணைகள், நகர்ப்புறக் கழிவுகள் என்பவற்றிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருட்கள் ஆறுகளிலும், வடிகால்களிலும், வேறு நீர்நிலைகளிலும் கலந்துவிடுவதால் நீரின் தரமும், நீர் வாழ் உயிரினங்களும் பாதிக்கப்படுகின்றன. இதனால் புவியின் நீர்வளங்கள் பாதிக்கப்படுகின்றன.மேலும் வளிமண்டலத்தில் கலக்கும் மாசுக்கள் மழைநீருடன் கலந்து நிலத்தை அடைகின்றன. இவை நீருடன் நிலத்துக்கு அடியில் சென்று நிலத்தடி நீரையும், ஆறுகள், குளங்கள் போன்றவற்றையும் மாசுபடுத்துகின்றன.

தொழிற்சாலைக் கழிவுகள் முக்கிய காரணிகளாக இருப்பினும், தற்கால வேளாண்மை முறைகளும் மண்மாசடைதலுக்கு மிக முக்கிய காரணங்கள் எனலாம். வேதியியல் உரங்கள், பூச்சிநாசினிகள், களைநாசினிகள் என்பனவற்றின் பெருமளவிலான பயன்பாட்டினால் மண் பெரிதும் பாதிக்கப்படுகின்றது..

இந்த மோசமான பாதிப்பில் இருந்து உலகத்தைப் பாதுகாக்க மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். நமது பூமி, இயற்கைச் செல்வங்கள் ஆகியவற்றை பாதுகாக்க வேண்டும். இது குறித்து இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படும் வகையில் பள்ளி, கல்லூரிப் பாடத் திட்டங்களிலும் சுற்றுச் சூழல் குறித்த பாடத்திட்டங்களை இடம் பெற செய்வது அவசியம்.

சுற்று சூழல் பறந்து விரிந்து கிடக்கும் உலகத்தில் நாகரீகம்

நவீன மாற்றமென சொல்லிக்கொண்டு சுற்றுச் சூழலை மாசுபடுத்தாமல் இருப்போம்.. மனிதனால் நாசமடைந்த பூவுலகு மனிதனால் புத்துயிர் பெறட்டும்.

**பல்வேறு வகையான வேதியியற் பொருட்களும், தூசியும் வளிமண்டலத்துக்கு வெளியேற்றப்படு வதன் மூலம் வளி மாசடைகின்றது. தற்காலப் போக்குவரத்து ஊர்திகளாலும், தொழிற்சாலைகளால் வெளி விடப்படும் கழிவுகளும் வளி மாசடைதலுக்கு மிக முக்கிய காரணங்களாகும்.**



# நைஜீரியா பள்ளி நிகழ்ச்சியில் திடீர் நெரிசல்:

# 30 பேர் பரிதாப பலி!



நைஜீரியா நாட்டின் ஓயோ மாகாணம் பசொரன் நகரில் பாடசாலை ஒன்று செயற்பட்டு வருகின்றது. குறித்த பள்ளியில் 100-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர்.

கிறிஸ்துமஸ் பண்டிகை மற்றும் ஆண்டு நிறைவையொட்டி அந்தப் பாடசாலையில் நேற்று கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த நிகழ்ச்சியைக் கண்டுகளிக்க மாணவ, மாணவியரின் குடும்பத்தினரும் வருகை தந்திருந்தனர். நிகழ்ச்சியின்போது பரிசு பொருட்கள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனால் நிகழ்ச்சியைக் காணவும், பரிசுப்பொருட்களை வாங்கவும் பள்ளிக்கூடத்தில் கூட்டம் குவிந்தது. எதிர்பாராத விதமாக கூட்ட நெரிசல் ஏற்பட்ட நிலையில் குறித்த நெரிசலில் சிக்கி 30 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்ததுடன் இதுதொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிடோ புயல் எதிரொலி

## ஆபிரிக்காவில் அதிகரிக்கும் உயிரிழப்பு!



ஆபிரிக்கா நாட்டை புரட்டிப்போட்ட சிடோ புயலில் தாக்கத்தால் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய பெருங்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுப்பெற்றது. இந்த புயலுக்கு 'சிடோ' என பெயரிடப்பட்டது.

கடந்த சில நாட்களாக கிழக்கு ஆபிரிக்கா அருகே கடலில் நிலை கொண்டுள்ள இந்த புயலின் தாக்கத்தால், மலாவியில் கனமழை கொட்டி வருகிறது.

இதனால் அங்கு ஊருக்குள் வெள்ளம் புகுந்து நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை , அண்டை நாடான மொசாம்பிக்கையும் 'சிடோ' புயல் தாக்கியது. குறிப்பாக நியாஸ்சா, கபோ டெல்கடோ உள்ளிட்ட கடலோர மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டது.

இதனால், அங்குள்ள ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்து தாழ்வான பகுதிகளுக்குள் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

புயல் காரணமாக மொசாம்பிக் நாட்டில் மட்டும் 34 பேர் உயிரிழந்ததுள்ளனர். மேலும், 300க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

## ஜமைக்காவில் துப்பாக்கிச்சூடு நெல்லை வாலிபர் உயிரிழப்பு

நெல்லை சந்திப்பு மீனாட்சிபுரம் புளியந்தோப்பு நடுத்தெருவை சேர்ந்தவர் நாகராஜன். இவரது மகன் விக்னேஷ் (வயது 31). பட்டதாரியான இவர் கடந்த 1 ஆண்டுக்கு முன்பு ஜமைக்கா நாட்டில் உள்ள சூப்பர் மார்க்கெட்டில் வேலைக்கு சேர்ந்தார்.

இந்நிலையில் நேற்று அதிகாலையில் குறித்த சூப்பர் மார்க்கெட்டில் கொள்ளை கும்பல் புகுந்து நடத்திய தாக்குதலில் விக்னேஷ் பரிதாபமாக இறந்தார்.

இந்த சம்பவம் குறித்து சூப்பர் மார்க்கெட் உரிமையாளர் செல்போனில் விக்னேஷ் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்ததையடுத்து விக்னேஷ் உடலை நெல்லைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவரது உறவினர்கள் தஞ்சை பகுதி தி.மு.க. செயலாளர் சுப்பிரமணியன் தலைமையில் வந்து கலெக்டர் கார்த்திகேயனிடம் மனு அளித்தனர்.

மேலும் அப்துல் வகாப் எம்.எல்.ஏ., மேயர் ராமகிருஷ்ணன், கவுன்சிலர் சுதா மூர்த்தி உள்ளிட்டோரும் கலெக்டரிடம் கோரிக்கை வைத்தனர்.

இதனைத்தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் ஏற்பாட்டில் அவரது உடலை நெல்லைக்கு கொண்டு வர தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விக்னேசின் உடல் சொந்த ஊருக்கு வர ஒரு வாரம் வரை ஆகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.



இதனிடையே ஜமைக்கா சூப்பர் மார்க்கெட்டில் நடந்த துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பான வீடியோ காட்சிகள் அங்கிருந்த சி.சி.டி.வி. கேமராக்களில் பதிவாகி இருந்தது. அந்த காட்சிகளை வைத்து கொள்ளை கும்பலை பொலிசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

## சீன வெளியுறவு மந்திரியுடன் அஜித் தோவல் பேச்சுவார்த்தை!



இந்தியா, சீனா இடையே உள்ள 3,488 கி.மீ. எல்லைப்பகுதியில் அமைதியையும், ஸ்திரத்தன்மையையும் பராமரிப்பது குறித்து விரிவாக விவாதிக்க, சிறப்பு பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தும் நடைமுறை கடந்த 2003-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

கடந்த காலங்களில் இந்த சிறப்பு பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை 22 முறை நடத்தப்பட்டுள்ளது. கடைசி கூட்டம் கடந்த 2019-ம் ஆண்டில் தலைநகர் டெல்லியில் நடந்தது.

இதனைத்தொடர்ந்து 5 ஆண்டுக்கு பின், சிறப்பு பிரதிநிதிகளின் 23-வது சுற்று பேச்சு சீனாவின் பீஜிங்கில் நடைபெற்றது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தலைமையிலான பிரதிநிதிகள் குழு, சீன வெளியுறவுத்துறை மந்திரி வாங் யீயைச் சந்தித்துப் பேசிய போது , எல்லையில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை பராமரிப்பது, கிழக்கு லடாக்கில் 2020-ல் நடந்த மோதலுக்கு பின் உறவில் ஏற்பட்ட விரிசலை சரிசெய்வது ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.

ரஷ்யாவில் நடந்த பிரிக்ஸ் மாநாட்டில் சீன அதிபர் ஜி ஜின்பிங், இந்திய பிரதமர் மோடி ஆகியோர் சந்தித்தபோது எட்டப்பட்ட பொதுவான புரிதல்களைச் செயல்படுத்த இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற தயாராக உள்ளோம் என சீன வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் லின் ஜியான் தெரிவித்தார்.

## மீண்டும் தோல்வியில் முடிந்தது ஜப்பான் ஸ்பேஸ் ஒன் ராக்கெட் திட்டம்!

ஜப்பானை சேர்ந்த ஸ்டார்ட் அப் ஸ்பேஸ் ஒன் என்ற தனியார் விண்வெளி நிறுவனம், ராக்கெட்டை விண்ணில் ஏவ முடிவு செய்தது. இதற்கான ஏற்பாடுகள் அந்நிறுவனம் செய்து வந்தது.

தனியார் நிறுவனத்தின் ராக்கெட் கடந்த மார்ச் மாதம் விண்ணில் ஏவப்பட்ட நிலையில் அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது. இந்நிலையில், ஸ்பேஸ் ஒன் நிறுவனம் உருவாக்கியுள்ள கெய்ரோஸ்-2 ராக்கெட், மத்திய ஜப்பானில் உள்ள வகயாமா மலைப்பகுதியில் உள்ள ஏவுதளத்தில் இருந்து நேற்று ஏவப்பட்டது. அந்த ராக்கெட் மூலம் செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தும் திட்டம் சிறிது நேரத்தில் கைவிடப்பட்டது.

ராக்கெட்டின் செயல்பாடு திருப்திகரமாக இல்லாததால் பாதுகாப்பு கருதி அந்த ராக்கெட்டை வெடிக்கச் செய்தோம் என ஸ்பேஸ் ஒன் நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த மார்ச் 13-ம் தேதி ஏவப்பட்ட ஸ்பேஸ் ஒன் நிறுவனத்தின் கெய்ரோஸ்-1 ராக்கெட், புறப்பட்ட சில விநாடிகளில் தானாகவே வெடித்துச் சிதறியது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா உடன்படிக்கைகளில் எமக்கு பாரிய நன்மை: ஆளுநர் நந்தலால் பகிரங்கம்

(கொழும்பு, டிச 19)

இந்தியா போன்ற உலகின் மிகப்பெரிய பொருளாதார சந்தையைக் கொண்டிருக்கும் நாட்டுடன் எட்கா போன்ற ஒப்பந்தத்தை செய்வது இலங்கைக்கு மிகப்பெரிய நன்மையாக அமையும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க (யேனெயடயட றுநநசயளiபொந) தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியில் நேற்று பத்திரிகை ஆசிரியர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில், "என்னைப் பொறுத்தவரையில் இந்தியாவுடனான பொருளாதார, வர்த்தக ரீதியிலான உடன்படிக்கைகள் இலங்கைக்கு பாரிய நன்மை பயக்கும். அதன் தொழில்நுட்ப ஏற்பாடுகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானிக்க வேண்டும்.

இந்தியா மிகப்பெரிய பொருளாதார சந்தையைக் கொண்டிருக்கின்ற நாடு.

இந்தநிலையில் எட்கா உடன்படிக்கை தொடர்பில் அரசாங்கம் மற்றும் வர்த்தக அமைச்சு தீர்மானிக்க வேண்டும்.

என்னுடைய தனிப்பட்ட கருத்து என்னவென்றால், இந்தியாவுடனான பொருளாதார வர்த்தக உடன்படிக்கையானது எமக்கு நன்மை தருவதாக அமையும். வருடம்தோறும் ஏழு மற்றும் எட்டு வீதங்களின் பொருளாதார வளர்ச்சி காணப்படுகின்றது.

எனவே, அது போன்ற ஒரு மிகப்பெரிய சந்தையைக் கொண்ட நாட்டுடன் நாம் வர்த்தக தொடர்பை ஏற்படுத்துவது சிறந்ததாக அமையும்.

அதில் எவ்வாறான தொழில்நுட்பங்கள் இடம்பெறும் என்பதை பேசித் தீர்மானிக்கலாம். ஆனால் அந்த நாட்டுடனான வர்த்தக உடன்படிக்கை எமக்கு முக்கியமானது.

இந்நிலையில், இந்தியா மட்டுமல்ல ஆசிய பசுபிக் நாடுகளுடன் நாம் அதிக வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்து கொள்ள வேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)



## எலிக்காய்ச்சல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதுவே எமது உடலில் எலிக்காய்ச்சல் பரவப் பிரதான காரணமாக உள்ளது.

இதே பக்றீரியாக்கள் நாய், ஆடு, மாடு, பன்றி போன்ற வளர்ப்பு மிருகங்களில் கூட நோயை ஏற்படுத்தி விடவும் வாய்ப்புக்கள் உண்டு. தொற்றுக்குள்ளான இவ் விலங்குகளின் மலம், சிறுநீர் போன்ற கழிவுகளில் இந் நோய்க்கிருமி வெளியேறி இவ் விலங்குகள் வாழும் சூழலில் நெருங்கிப் பழகும் மனிதரிலும் இந் நோயக்கிருமி பரவி, நோயப் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

மனிதனின் குருதியில் நோய்க் கிருமிகள் உள்ளதை இரத்தப் பரிசோதனைகள் மேற்கொண்டு உறுதிப்படுத்துவதை போலவே வளர்ப்பு விலங்குகளின் குருதி, சிறுநீர் ஆகியவற்றை ஆய்வுகூடப் பரிசோதனைக்கு உட்படுத்தி நோய்க் கிருமியின் பிரசன்னத்தை உறுதிப்படுத்த முடியும்.

மேலும், வடக்கு மாகாணத்தின் வடமராட்சி மற்றும் தென்மராட்சி பகுதிகளில் அண்மைக்காலத்தில் மனிதர்களில் அடையாளம் காணப்பட்ட இந்நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக வளர்ப்பு விலங்குகளில் இந் நோயின் கிருமிகள் தொற்றாது உரிய சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மத்திய மற்றும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இச்செயற்பாடுகளில் நேரடியாக இணைந்து கொள்ளும் பொருட்டு, நேற்றுப் புதன்கிழமை மத்திய கால்நடை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து நோய் ஆராய்ச்சி நிபுணர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தமது ஆய்வுகளை மேற்கொண்டனர்.

பல்வேறு பகுதி பண்ணை விலங்குகளின் குருதி மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வுகூட பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடு நடைபெற்று வருகின்றன.

இந்நோய் பரவாது தடுப்பதற்கு கொதிக்கவைத்த நீரைப் பருகுதல், சுகாதாரம் பேணப்படாத உணவு நிலையங்களில் உண்பதைத் தவிர்த்தல்,செருப்பு அல்லது பூட்ஸ் அணிந்து வெளியில் செல்லல், வெளியே போய் வந்த பின் கை, கால்களை சவர்க்காரம் இட்டு நன்கு கழுவுதல், மழை வெள்ளம் ஏற்படும் காலங்களில் கால்நடைகளை நீர் தேங்கியுள்ள பிரதேசங்களில் கட்டி வைத்தல் மற்றும் மேய்ச்சலுக்கு அனுப்புதல் ஆகியவற்றை தவிர்த்துக் கொள்ளல் அவசியமாகும்.

இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு மனிதரில் தொற்றுக்களைத் தவிர்ப்பதற்கு விலங்குகளின் கழிவுகள் தேங்கும் பகுதிகளில் உடற்பகுதிகள் நேரடியாகத் தொடுகையுறுவதை தவிர்த்தல் அவசியமானதாகும். இந்நோயானது,

நாய்களையும் தாக்க வல்லது என்பதால் வளர்ப்பு மற்றும் கட்டாக்காலி நாய்களின் சிறுநீர் மற்றும் மலம் என்பன மனித ரில் தொற்றுக்களை ஏற்படுத்தக்கூடியவை என்பதை நினைவிற் கொள்ளல் அவசியம்.

நாய்களில் இந்நோய் ஏற்படாது தடுப்பதற்கான தடுப்பூசிகள் இலங்கையிலும் சகல பிரதேசங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்" என அவர் தெரிவித்தார். (ஐ-09)

## 103...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பின்னர் படகில் வந்தவர்களில் 103 பேர் மியன்மாரில் இருந்து வெளிநாடுகளுக்குப் புகலிடம் கோரிப் புறப்பட்ட அகதிகள் எனத் தெரியவருவதாகவும், கடற்படை ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

படகில் இருந்து மீட்கப்பட்டவர்களில் 25 சிறு வர்களும் உள்ளனர். கணிசமானவர்கள் நோய்வாய்ப்பட்டும், மயக்கமுற்ற நிலையிலும் மீட்கப்பட்டுள்ளனர். கடற்படையினருடன் இணைந்து, பொலீஸ் மற்றும் இராணுவ வீரர்க ளும் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட அகதிகளுக்கு முல்லைத்தீவு மீனவர் சங்கத்தினரால் உணவுப் பொருட்கள், உலருணவு மற்றும் நீராகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-05)

## மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்தியாவசிய திட்டங்களை மேற்கொள்ள மின்சார சபை திட்டமிட்டுள்ளது.

மேலும், எதிர்காலத்தில் நாட்டில் நிர்மாணிக்கப்படவுள்ள பெரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க திட்டங்களின் அமைப்பில் சேர்க்கும் வகையில் பல அத்தியாவசிய டிரான்ஸ்மிஷன் லைன் திட்டங்களும் உருவாக்கப்படும் என மின்சார சபை தெரிவித்துள்ளது. (ஐ-07)

## உப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். அண்மையில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் மன்னார், ஹம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதனால் பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெட்ரிக் டன் உப்பை இறக்குமதி செய்ய அனுமதி வழங்குமாறு உப்பு உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதற்கமைய, பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெட்ரிக் டன் உப்பை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் அரச வர்த்தக கூட்டுத்தாபத்தின் மூலம் இறக்குமதி செய்து உள்நாட்டு உப்பு உற்பத்தியாளர்கள் ஊடாகச சந்தைக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் குறிப்பிட்டார். (ஐ-12)

## மனிதாபிமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் - ஜனாதிபதியின் அண்மைய இந்திய விஜயத்தின் போது இலங்கை - இந்தியா இடையே கடற்றொழிலாளர்கள் விடயம் தவிர இணக்கம் காணப்பட்ட அல்லது கைச்சாத்திடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களை வலுவூட்டியதாகவே அமைந்துள்ளது. அதனடிப் படையில் குறித்த செயற்பாட்டை நான் வரவேற கின்றேன்.

இதேவேளை, கடற்றொழிலாளர் பிரச்சினைகளில் எதுவிதமான தீர்வுகளையும் குறித்த விஜயத்தின்போது எட்டப்பட்டதாக தெரியவில்லை. இதேநேரம் மனிதாபிமான அடிப்படையில் குறித்த விடயத்தை அணுக வேண்டும் என்ற நிலைப்பாடு வலியுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறாயின் மனிதாபிமான நிலைப்பாடு என்பது என்ன என்பதே இன்றுள்ள கேள்வியாக இருக்கின்றது.

அதாவது இலங்கையின் கடற்பரப்பிற்குள் இந்திய மீன்பிடியாளர்கள் வந்து மீன்களை பிடித்து செல்வதற்கும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் இலங்கை கடற்படையினர் அவர்களை கைது செய்யாதிருக்க வேண்டும் என்பதே இந்த மனிதாபிமான நிலைப்பாடாக இருக்க வேண்டும்.

ஆனால் எனது நிலைப்பாடு அன்றும் சரி இன்றும் சரி எமது கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமாக இந்திய மீன்பிடியாளர்கள் உள்நுழைந்து மீன்களை பிடிக்கவோ எமது வளங்களை அபகரிக்கவோ ஒரு வினாடி கூட இடமளிக்க கூடாதென்பதாகவே இருக்கின்றது. இதை நான் பொது வெளியிலும் பல தடவைகள் கூறியிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாது கடந்தகாலம் நான் ஆட்சியில் இருந்தபோது இலங்கை இந்திய வெளிவிவகார உயரதிகாரிகள் கலந்துகொண்ட கலந்துரையாடலின் போது சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அப்போதும் இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு எந்தவகையிலும் இந்திய சட்ட விரோத மீன்பிடி செயற்பாடுகளுக்கு இடம் கொடுக்க முடியாதென நான் கூறியிருந்தேன்" என்றார். (ஐ-07)

# ரயில் மோதி உயிரிழப்பு

(கொழும்பு, டிச 19)

திம்புள்ள- பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை பகுதியில் தொடருந்தில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் இன்று அதிகாலை இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கொட்டகலை தொடருந்து நிலையத்திற்கு அருகாமையில் கொழும்பில் இருந்து பதுளை நோக்கி சென்று கொண்டிருந்த இரவு நேர தொடருந்தில் மோதுண்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்தவர் கொட்டகலை கங்கைபுரத்தை சேர்ந்த வெள்ளசாமி ஜெயகுமார் (40) திருமணமான ஒரு பிள்ளையின் தந்தை என பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கொட்டகலை புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு வைத்திய பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக புகையிரத நிலை யத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். குறித்த நபர் தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது புகையிரதத்தில் மோதுண்டு இறந்தாரா? என்பது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!